சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரிவிலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று **"இவனுக்கு தண்ணீல கண்டம்"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 38**

**நாள்: 28.01.2015**
**ஜய, தை 14,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2046**

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/637/15, நாள் 22.01.2015 தேர்வுக்குழு எண். 111/2014–2015.
4. பொது (தேர்தல்கள்–III) துறை அ.சா.கு.எண்.13500/2014–125, நாள் 24.01.2015.
5. திருவாளர்கள் வி.வி.ஆர்.சினி மாஸ்க் உரிமையாளரின் கடிதம் நாள் 28.1.2015.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு **"இவனுக்கு தண்ணீல கண்டம்"** தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களும் வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் திருவாளர்கள் வி.வி.ஆர்.சினி மாஸ்க் உரிமையாளர், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், **“இவனுக்கு தண்ணீல கண்டம்”** தமிழ் திரைப்படத்தை 29.1.2015 அன்று தாங்கள் திட்டமிட்டபடி வெளியிட ஏதுவாக திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக தமிழகத்தின் பிற பகுதிகளில் வரிவிலக்குடன் வெளியிட உரிய ஆணைகள் வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தற்போது ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 12.01.2015 முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், தேர்தல் ஆணையம் பார்வை நான்கில் படிக்கப்பட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் வழங்கியுள்ள இசைவின் அடிப்படையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களில் திரையிடப்படும் **“இவனுக்கு தண்ணீல கண்டம்”** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

5. திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் **“இவனுக்கு தண்ணீல கண்டம்”** தமிழ் திரைப்படத்தினை திரையிடுவதன் மூலம் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியினை அரசுக்கு செலுத்த வேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தங்களை வழங்குமாறு முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/1/2015

பிரிவு அலுவலர்.

28/1/15